**வாழையில் பின்செய் நேர்த்தி முறைகள்**

First Published : 26 May 2011 12:00:00 AM IST

Last Updated : 26 May 2011 05:25:10 AM IST



குலை தள்ளிய வாழைமரம்.

புதுச்சேரி, மே 25: வாழை சாகுபடி செய்வதற்கு முன்பு நிலத்தைப் பக்குவப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளைச் செய்ய வேண்டும். வாழை நட்டப் பிறகு சில பராமரிப்புப் பணிகளைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும். அப்படி செய்தால் மகசூல் அதிகம் பெற முடியும்.

எல்லா பயிர்களையும் போலவே வாழையிலும் பூச்சி தாக்குதல், நோய் தாக்குதல் இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்தி அதிக மகசூல் எடுப்பது எப்படி என்பதை விளக்குகிறார் பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் நிபுணர் என். விஜயகுமார்: அவர் கூறியது:

வாழையில் இரண்டு மாதத்துக்கு ஒரு முறை மண்வெட்டியால் கொத்தி மண் அணைக்க வேண்டும். பக்கக் கன்றுகளை மாதம் ஒரு முறை நீக்க வேண்டும். இலைக்காகச் சாகுபடி செய்யப்படும் பூவன், கற்பூரவள்ளி மற்றும் மொந்தன் ரகங்களில் முதல் மூன்று அல்லது நான்கு பக்கக் கன்றுகளை வளர விடலாம்.

பக்கக் கன்றுகளைக் கத்தி கொண்டு வெட்டி அழிக்கலாம். மீண்டும் மீண்டும் துளிர்த்தால் பக்கக் கன்றுகளின் நடுக்குருத்தில் ஒரு கன்றுக்கு இரு சொட்டுகள் மண்ணெண்ணையைக் கவனமாக இங்க் ஃபில்லர் கொண்டு விட்டும் அழிக்கலாம். அதிக சொட்டுகள் மண்ணெண்ணைய் விட்டால் தாய்க்கன்றுகள் இறந்து விடும்.

கடைசி பூ அல்லது சீப்பு வெளிவந்த ஒரு வாரத்தில் ஆண் பூவை ஒடித்து விடவேண்டும். பிறகு, 10 கிராம் யூரியா தொட்டுக் கொண்டிருக்கும்படி ஒடித்த இடத்தில் உள்ள காம்பு பகுதியில் ஒரு

பாலித்தீன் பையில் போட்டு கட்டி விட வேண்டும். இதனால் சத்துக்கள் அனைத்தும் காய்களுக்கு செல்வதால் வாழைக்காய்கள் சீக்கிரம் முதிர்ச்சியடைகிறது.

வாழைக்காய்களின் பருமனை அதிகரிக்க ஒரு கிராம் 2, 4 டி மருந்தை 20 மிலி எரிசாராயத்தில் கரைத்து பின் அத்துடன் 40 லிட்டர் தண்ணீர் கலந்து 200 தார்களில் பூவின் கடைசி மடல் விரிந்ததும் கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

வாழையில் விதைப் பிடிப்பின்மை, நீண்ட சதைப் பற்றுள்ள காய் மற்றும் அதிக காய்ப்பிடிப்பு தன்மையை அதிகரிக்க, பயிர் வளர்ச்சி ஊக்கி சைட்டோசைம் 180 மி.லியை 180 லிட்டர் தண்ணீரில் கலந்து ஓர் ஏக்கர் வாழை மரங்களில் நடவு செய்த 90 மற்றும் 120 வது நாட்களில் விசைத்தெளிப்பான் கொண்டு அதிகாலை அல்லது மாலை நேரங்களில் மட்டும் தெளிக்க வேண்டும்.

வடிகால் வசதியில்லாத நீர்ப் பிடிப்பு தன்மை அதிகமாக உள்ள வாழை வயலில் ஒரு வாழை மரத்துக்கு யூரியா அல்லது அமோனியம் சல்பேட் 25 கிராம் என்ற அளவில் 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து விசைத்தெளிப்பான் மூலம் மரங்கள் மீது நன்கு நனையும் படி தெளிக்க வேண்டும்.

வறட்சியான சமயங்களில், ஒரு வாழை மரத்திற்கு டை பொட்டாசியம் ஹைட்ரஜன் பாஸ்பேட் 20 கிராம் என்ற அளவில் 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து விசைத்தெளிப்பான் கொண்டு இலைகள் முழுவதும் நனையும்படி தெளிக்க வேண்டும்.

வாழைத் தார் நன்கு பெருக்க, பொட்டாசியம் சல்பேட் 20 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து தார் மீது நன்கு படும்படி தெளித்தல் அவசியம். வாழைத்தார் நன்கு பெருக்க, ஒரு மரத்துக்கு யூரியா 350 கிராம் மற்றும் மியூரேட் ஆப் பொட்டாஷ் 250 கிராம் வேர்ப்பகுதியில் மண்ணில் இட்டு நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

காய்களின் முதிர்ச்சிக்கு மிக முக்கியமான கண்ணாடி மற்றும் முதல் மூன்று இலைகளைக் கொண்டு தாரை மூடுவதை தவிர்ப்பது எடை அதிகமான தார்களை உண்டாக்கும். இதற்குப் பதிலாக, வாழைக்காய்கள் வெப்பத்தினால் வெடிக்காமல் இருக்க வாழைத்தாரை காய்ந்த இலைகள் கொண்டோ அல்லது பாலித்தீன் பைகள் கொண்டோ மூட வேண்டும். வாழை குலை தள்ளும் சமயம், மறுதாம்பு பயிருக்கு ஒரு வீரிய கன்றை ஒதுக்கிவிடவேண்டும். காற்றடிக்கும் நேரங்களில், மரங்கள் சாய்ந்து விடாமல் இருக்க திடமான கம்பு கொண்டு எதிர்புறமாக முட்டுக் கொடுக்க வேண்டும்.

காய்ந்த இலை மற்றும் நோய் தாக்கிய இலைகளை அவ்வப்போது அகற்றி எரிப்பதால் வயலை நோய், பூச்சி தாக்குதலிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம். காய்களின் நுனியில் ஒட்டியிருக்கும் பூவின் எஞ்சிய பாகத்தை நீக்குவதால் நோய் பரவுதலை தடுக்க முடியும். குலை வெட்டிய பின்பு, இலையில் வெட்டுப்பாகத்தில் வாசலின் அல்லது களிமண் கொண்டு பூச வேண்டும். குலை வெட்டிய தாய் வாழைகளை கிழங்குகளுடன் அகற்றி இயற்கை உரமாக தயாரிக்கலாம்.

குலை வெட்டிய தாய் வாழை மரங்களின் பட்டைகளிலிருந்து வாழை நார் எடுத்து வணிகச் சந்தைக்கு அனுப்பலாம்.

நன்செய் நில வாழையில் ஒவ்வொரு வரிசை விட்டு கால்வாய்கள் எடுக்க வேண்டும். மேலும், ஐந்து வரிசைகளுக்கிடையில் குறுக்கு கால்வாய்கள் எடுக்க வேண்டும்.

நல்ல மகசூல் பெறுவதற்கு, ஒரு வாழை மரத்தில் 10 முதல் 12 பச்சை இலைகள் இருக்க வேண்டும். கூடுதல் வருமானம் கிடைக்கவும், களைகளைக் கட்டுப்படுத்தவும் வாழையில் ஊடுபயிராக மணிலா, உளுந்து, தட்டைப்பயிர், மொச்சை, சோயா மொச்சை, மிளகாய், கிழங்கு வகைகள், பூ வகைகள், இஞ்சி மற்றும் மஞ்சள் போன்ற பயிர்களைப் பயிர் செய்யலாம்.

கொடிவகை காய்கறிகளான பூசணி, தர்பூசணி, பரங்கி, வெள்ளரி, பாகல், சுரை மற்றும் புடலை போன்றவற்றை வாழையில் ஊடுபயிர்களாகப் பயிரிடக்கூடாது. ஏனெனில், இக்கொடி வகைக் காய்கறிகளில் ஏற்படும் ஒரு வகை வைரஸ் நச்சுயிரி நோய், வாழைக்கு பரவும் அபாயம் உள்ளது.

வாழையைத் தாக்கும் ஆப்பிரிக்க நத்தை பூச்சி பப்பாளி, தக்காளி, பலா, சம்பங்கி, சாமந்தி, ரப்பர், பாக்கு, காப்பி, தேயிலை, நெல், காய்கறி மற்றும் கோகோ பயிர்களைத் தாக்குவதால் இந்தப் பயிர்களை எக்காரணம் கொண்டும் வாழையில் ஊடுபயிராகப் பயிரிடக்கூடாது.

**பூக்கள் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்**

First Published : 26 May 2011 12:00:00 AM IST



திருத்தணியை அடுத்துள்ள பெருங்களத்தூர் கிராமத்தில் பயிரிட்டுள்ள மல்லிகை பூச்செடிகள்.

திருத்தணி, மே 25: திருத்தணி பகுதியில் அண்மைக்காலமாக பூக்கள் பயிரிடுவதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வேலஞ்சேரி, முருகம்பட்டு, பொன்பாடி, தாழவேடு, சத்திரஞ்ஜெயபுரம், நாணமங்கலம், பெருங்களத்தூர், கீழாந்தூர் உள்ளிட்ட 40-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. விவசாய கிராமங்களான இப்பகுதியில் தங்கள் நீர்ப்பாசன நிலங்களில் கரும்பு, நெல், வேர்க்கடலை,

உளுந்து, துவரம், பருத்தி உள்ளிட்ட பல்வேறு பயிர்களையே விவசாயிகள் அதிக அளவில் பயிர் செய்து வந்தனர்.

அண்மைகாலமாகவே மின்சாரப் பற்றாக்குறை நிலவி வருவதாலும், உரம் விலை உயர்வு, கூலியாட்கள் பற்றாக்குறை, கூலி உயர்வு உள்ளிட்டவைகளால் விவசாயிகள் தவித்து வருகின்றனர். மேலும் மகசூலுக்கு நிச்சயமற்ற விலை என்ற நிலை இருப்பதால் இப்பகுதி விவசாயிகள் மாற்றுப் பயிர்களை நாடும் நிலை வந்தது. அதன்படி அதிக செலவு, சிரமம் இல்லாத காரணத்தால் இப்பகுதி விவசாயிகள் தற்போது பூக்கள் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அரை ஏக்கர் முதல் ஒரு ஏக்கர் வரை சம்பங்கி, ரோஸ், மல்லிகை, முல்லை, கோழிக் கொண்டை, சாமந்தி, டில்லி கனகாம்பரம் உள்ளிட்ட பயிர்களை பயிரிடும் விவசாயிகள், பறிக்கும் பூக்களை திருத்தணி, திருவள்ளூர், சென்னை, அரக்கோணம் ஆகிய ஊர்களில் உள்ள பூ மார்க்கெட்டுகளுக்கு அனுப்பி சில்லறை விலையிலும், மொத்த விலைக்கும் விற்று வருகின்றனர்.

பூக்களுக்கு நல்ல கிராக்கி இருப்பதால் குறைந்த உழைப்பில் நிறைந்த லாபத்தை விவசாயிகள் பெருவதால் விவசாயிகளுக்கு பூக்களை பயிரிடுவதில் ஆர்வம் அதிகரித்துள்ளது.

**கரும்பில் அதிக மகசூலுக்கு சொட்டுநீர்ப் பாசன முறை**

First Published : 26 May 2011 12:00:00 AM IST



கடலூர் அருகே மருதாடு கிராமத்தில் கரும்புப் பயிருக்கு சொட்டுநீர்ப் பாசன வசதி செய்யப்பட்டு இருப்பதை பார்வையிடுகிறார் வேளாண் துணை இயக்குநர் சந்திரமோகன் (

கடலூர், மே 25: கரும்புப் பயிருக்கு சொட்டுநீர் பாசனம் கடலூர் மாவட்டத்தில் பிரபலம் அடைந்து வருகிறது.

பாரம்பரிய விவசாயத்தில் ஏக்கருக்கு சராசரியாக 40 டன் மகசூல் கிடைக்கிறது. கரும்புப் பயிருக்கு சொட்டு நீர்ப்பாசனம் மேற்கொள்வதால் ஏக்கருக்கு கரும்பு மகசூல் 100 டன் வரை கிடைக்கும் என்கிறார்கள் வேளாண் அலுவலர்கள்.

தண்ணீர் தேவையும் உரத் தேவையும் குறைகிறது. உரம் தண்ணீரில் கரைத்து அளிக்கப்படுகிறது. இதனால் கடலூர் மாவட்டத்தில் கரும்புப் பயிரில் சொட்டு நீர்ப்பாசனம் பிரபலம் ஆகி வருகிறது.

கரும்புக்கு சொட்டு நீர்ப்பாசனம் மேற்கொள்ள அரசு 65 சதவீதம் வரை மானியம் வழங்குகிறது. டான்ஹோடா என்ற அமைப்பின் மூலமாகவும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் மூலமாகவும் இந்த மானியம் வழங்கப்படுகிறது. மானியத் தொகையில் ஏக்கருக்கு ரூ.25 ஆயிரத்துக்கு கரைசல் உரம், பூச்சிக் கொல்லி மருந்துகள் வழங்கப்படுகின்றன. மீதம் உள்ள தொகை சொட்டுநீர்ப் பாசனத்துக்கான கருவிகளுக்காக வழங்கப்படுகிறது.

இந்த மானியம் தனிநபர் விவசாயிகளுக்கு வழங்கப்படுவது இல்லை. துல்லியப் பண்ணை விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகள் 20 அல்லது 25 பேரை ஒருங்கிணைத்து குழு ஒன்று பதிவு செய்யப்படுகிறது. இக்குழு மூலம் அதில் உறுப்பினர்களாக உள்ள கரும்பு விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

கடலூர் வட்டாரத்தில் கரும்பு துல்லியப் பண்ணை திட்டத்தில் சொட்டுநீர்ப் பாசனத்துக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் மறுதாடு கிராமத்தில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கப்பட்டுள்ள கரும்பு வயல்களை வேளாண் துணை இயக்குநர் (மத்திய திட்டம்) வீ.சந்திரமோகன் புதன்கிழமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு திருப்தி தெரிவித்ததாக கடலூர் வேளாண் உதவி இயக்குநர் சீ.இளவரன் தெரிவித்தார்.

துல்லியப் பண்ணை விவசாய திட்டத்தில் சொட்டுநீர்ப் பாசனம் மேற்கொள்வதால் பாசன நீர் சிக்கனமாகப் பயன்படுத்தப்படுகிறது. நீரில் கரையும் உரங்களை இடுவதால் நிறைந்த மகசூலுக்கு வழிவகுக்கிறது என்று விவசாயிகள் கருத்து தெரிவித்ததாக இளவரசன் குறிப்பிட்டார்.

**லிண்டேன் பூச்சிக் கொல்லி மருந்துக்கு நிரந்தரத் தடை**

First Published : 25 May 2011 02:48:01 PM IST

கடலூர், மே 24: லிண்டேன் பூச்சிக் கொல்லி மருந்துக்கு நிரந்தரத் தடை விதிக்கப்பட்டு இருப்பதாக, வேளாண் துறை அறிவித்து உள்ளது.

கடலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் இளங்கோவன் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

லிண்டேன் பூச்சிக் கொல்லி மருந்தை விவசாயிகள் பயன்படுத்தி வருகிறார்கள். லிண்டேன் பூச்சிக்கொல்லி மருந்தை மத்திய அரசு தடை செய்து உள்ளது.

இந்தத் தடையாணைப்படி எந்த நபரோ?, நிறுவனமோ? லிண்டேன் பூச்சிக் கொல்லி மருந்தை உற்பத்தி செய்யவோ, இறக்குமதி செய்யவோ, விற்பனை செய்யவோ 25-3-2011 முதல் நிரந்தரத் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

அரசாணை வெளியிட்ட 2 ஆண்டுகளுக்கு பின் ஏற்கெனவே உற்பத்தி செய்யப்பட்ட லிண்டேன் பூச்சிக் கொல்லி மருந்தை விற்பனை செய்யவும், பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

மேற்கண்ட அரசாணையை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

**திருவாரூரில் மே 27-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 25 May 2011 11:38:35 AM IST

Last Updated : 25 May 2011 02:26:36 PM IST

திருவாரூர், மே 24: திருவாரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (மே 27) நடைபெறவுள்ளது.

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது.

மே மாதத்துக்கான கூட்டம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் அனைத்துத் துறை அலுவலர்கள் பங்கேற்கவுள்ளனர். எனவே, திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று தங்களது குறைகள், கோரிக்கைகள் ஆகியவற்றை தெரிவித்து பயன்பெறலாம் என ஆட்சியர் அலுவலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தக்காளி வரத்து குறைவு: விலை ஏற்றம்**

First Published : 25 May 2011 09:57:38 AM IST

திண்டுக்கல், மே 24: நத்தம் பகுதியில் தக்காளி வரத்து குறைவு காரணமாக விலை ஏற்றம் அடைந்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம், மணக்காட்டூர், சிறுகுடி, அரவங்குரிச்சி, செந்துரை, சிலுவத்தூர், முளையூர் ஆகிய பகுதிகளில் அதிகளவு தக்காளி பயிரிடப்படுகிறது. இதன் காரணமாக, கடந்த மாதம் தக்காளி விளைச்சல் அதிகமாக இருந்ததால், கிலோ ஒரு ரூபாய்க்கு விற்கப்பட்டது. ஆனால், தற்போது இப்பகுதியில் அதிக வறட்சி காணப்படுவதால், செடிகளை வெப்பம் தாக்குவதன் காரணமாக பூப்பிடிக்கும் தன்மை குறைந்து, விளைச்சலும் குறைந்துபோனது. இதனால், தக்காளி வரத்தும் குறைந்துள்ளது.

20 கிலோ எடை கொண்ட நாட்டுத் தக்காளி கூடை ரூ. 200 முதல் ரூ. 220 வரையிலும், ஒட்டு ரகத்தைச் சேர்ந்த தக்காளி ரூ. 150 முதல் ரூ. 160 வரையிலும் விலை போகிறது.

விளைச்சல் அதிகரித்தாலும், குறைந்து போனாலும் பாதிக்கப்படுவது விவசாயிகளே.

**'காவிரி நீர் பாசனம் பெறும் விவசாயிகள் குறுவை சாகுபடிக்கு தயாராகலாம்'**

First Published : 25 May 2011 11:32:55 AM IST

Last Updated : 25 May 2011 02:12:44 PM IST

புதுக்கோட்டை, மே 24: புதுக்கோட்டை மாவட்டத்தில் காவிரி நீர் பாசனம் பெறும் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் நிகழாண்டுக்கான குறுவை சாகுபடிக்கு தயார் நிலையில் இருக்க வேண்டும் என வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் தி. தங்கவேல் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நிகழாண்டுக்கான குறுவை நெல் சாகுபடிக்கு தமிழக அரசு முன்கூட்டியே ஜூன் 6 ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்படும் என அறிவித்துள்ளதால், குறுவை நெல் சாகுபடியை மேற்கொள்ள முடியும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கந்தர்வகோட்டை, திருவரங்குளம், கறம்பக்குடி, அறந்தாங்கி ஆகிய வட்டாரங்களில் காவிரி நீர்ப் பாசன விவசாயிகள் குறுவை பருவத்தில் ஒற்றை நாற்று நடவு முறையில் நெல் சாகுபடி செய்யலாம்.

குறுவை நெல் சாகுபடிக்குத் தேவையான ஏடிடி- 43, ஏடிடி- 45 போன்ற உயர் விளைச்சல் ரகங்கள் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தனியார் மற்றும் கூட்டுறவு விதை விற்பனை உரிமம் பெற்ற நிறுவனங்கள் மூலமும் சான்று பெற்ற உயர் விளைச்சல் ரக விதைகள் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், குறுவை நெல் சாகுபடிக்குத் தேவையான உயிர் உரங்கள், நுண்சத்து உரங்கள் போதுமான அளவு வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

மேலும், தகவலுக்கு வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக வேளாண் தகவல் மைய தொலைபேசி எண் 04322-232011-க்கு தொடர்பு கொள்ளலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**வீரியம் இழந்த புதிய விதைப்புரட்சி**

ஆர்.எஸ். நாராயணன்

First Published : 26 May 2011 12:29:53 AM IST

எதிர்கால உணவுத் தேவையை நிறைவேற்ற இந்தியா 2020-ல் நுழையும்போது அரிசி உற்பத்தி மட்டும் 12.21 கோடி டன்னுக்கு உயர்த்தப்பட வேண்டும் என்று மத்திய திட்டக்கமிஷன் இலக்கு நிர்ணயித்தது.

இன்றுள்ள வளர்ச்சி வீதம் நீடித்தால்-அதாவது ஆண்டுக்கு 1.34 சதம் என்றால் 2020-ல் 10.6 கோடி டன் அரிசிதான் இயலும். 12.21 கோடி டன் இலக்கை எப்படி நிறைவேற்றுவது என்ற கேள்விவந்தபோது, 2007-ல் தேசியப் பசிப்பிணிப் பாதுகாப்பு மிஷன் உருவாக்கப்பட்டு, 2011-12-ல் அரிசி உற்பத்தியை 10 கோடி டன்னுக்கு உயர்த்த முடிவானது. அரிசியுடன் கோதுமை மற்றும் பருப்பு உற்பத்தி உயர்வுக்கான வரையறையும் தேசியப் பசிப்பிணிப் பாதுகாப்பு மிஷனில் செய்யப்பட்டது. இவற்றுக்காக 4,882 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

இதில் அரிசி உற்பத்தி உயர்வுக்கான பங்கு 1963 கோடி ரூபாய். இதைத் தொடர்ந்து இந்த ஆண்டு நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி ""கிழக்கு மாநிலங்களில் இரண்டாவது பசுமைப்புரட்சி" என்று கோஷமிட்டு, ராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் யோஜனா நிதியிலிருந்து 400 கோடி ரூபாய் பணத்தை மேற்படி மாநில அரிசி, பருப்பு, எண்ணெய் வித்து, உற்பத்தி உயர்வுக்காக ஒதுக்கியது நினைவிருக்கலாம். கிழக்கு மாநிலங்கள் என்றால் இவற்றில் பிகார், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், மேற்கு வங்கம், ஒரிசா, கிழக்கு உ.பி. அடங்கும்.

இந்தியாவின் கிழக்குப் பிராந்தியங்களில் அரிசியின் உற்பத்தித்திறன் - அதாவது தலா ஹெக்டேர் விளைச்சல் பஞ்சாப் - ஆந்திரப் பிரதேசம் - தமிழ்நாடு அளவைவிடக் குறைவாயிருப்பதன் காரணம் வீரிய ரகம் அல்லது ஒட்டுவீரிய ரக விதைப்பயன் குறைவு என்று கூறும் கிரிக்கெட் விவசாய அமைச்சர் சரத்பவார் சீனாவைப் பின்பற்ற வேண்டுமென்று கூறுகிறார்.

சீனாவில் சுமார் 3 கோடி ஹெக்டேர் நிலத்தில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. அதில் சுமார் 2 கோடி ஹெக்டேர் நிலத்தில் வீரிய ஒட்டு ரக நெல் பயிராகிறது. சீனாவில் வீரிய ஒட்டு ரகம் சுயம்பூ ஐ.ஆர்.ஆர்.ஐ. மணிலா தயாரிப்பு அல்ல. 1964-ல் சீனாவில் தொடங்கப்பட்டுள்ள அந்தத் தொழில்நுட்பத்தில் அயல் மகரந்தச் சேர்க்கை மூலம் ஒரு வரிசையில் மலட்டு நெல்லும் ஒரு வரிசையில் வீரிய ரகமும் நட்டு வீரிய ஒட்டு என்ற ஹைபிரீட் விதை நெல் உற்பத்தியாவதாக ஒரு கருத்துண்டு.

மலட்டு நெல்லையும் வீரிய நெல்லையும் கலந்து வீரிய ஒட்டு விதை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம் அறிந்த இந்திய அரிசி விஞ்ஞானி ரிச்சாரியோ, இந்தியாவுக்கு ஐ.ஆர்.ஆர்.ஐ. நெல் வேண்டாம் என்று ஃபோர்டு பவுண்டேஷனை எதிர்த்துப் போர் தொடுத்தார். ரிச்சாரியோ, கட்டாக் அரிசி ஆய்வு நிலையத்தின் தலைமை விஞ்ஞானியாகவும் டைரக்டராகவும் செயல்பட்டார்.

ஐ.ஆர்.ஆர்.ஐ. நெல் வேண்டாம் என்றதால் அவரை ஓரம் கட்டினார்கள். அவர் வழக்குத் தொடர்ந்தார். அவருக்குச் சம்பளம் நிறுத்தப்பட்டது. முடிவில் இதய நோய் வந்து இறந்துபோனார். ஐ.ஆர்.ஆர்.ஐ. நெல் விதையை அப்போதே அவர் வேண்டாம் என்றார். இப்போதுதான் மத்திய அரசு ஐ.ஆர்.ஆர்.ஐ. நெல் வீரியம் இழந்ததை உணர்கின்றனர். இப்போது சீனாவிலிருந்து வீரிய ஒட்டு விதை நெல்லை இறக்குமதி செய்யலாமென்று யோசிக்கப்படுகிறது.

சீனாவின் உற்பத்தித்திறன் 6.61 டன் நெல். இந்தியா 3.37 டன். இதன் காரணம் வீரிய ஒட்டு ரக நெல் மட்டுமல்ல. சீனாவில் 90 சதவீத சாகுபடி நிலம் நீர்வளம் நிரம்பியது. இந்தியாவில் சுமார் 50 சதவீத நெல் சாகுபடி நிலம் மட்டுமே நீர்வளம் உள்ளது. மானாவாரி நெல் சாகுபடி சீனாவில் இல்லை. தவிரவும் இந்தியாவைவிட சீனாவில் ரசாயன உரம் அதிகம் வழங்கப்படுகிறது. ஆகவே, சீனாவிலிருந்து வீரிய ஒட்டு விதை நெல்லை இறக்குமதி செய்வதால் மட்டும் உற்பத்தியை உயர்த்த இயலாது. நமது சூழ்நிலைக்கு ஏற்ப நல்ல மகசூல் தரக்கூடிய நெல் விதைகளைத் தேர்வு செய்வது நல்லது.

அரிசி உற்பத்தியை உயர்த்த வீரிய ஒட்டு நெல் விதைகளே சரியான தீர்வு என்று கூறிய அமைச்சர் சரத் பவாரின் யோசனையை ஏற்று கடந்த பத்தாண்டுகளாக இந்தியாவில் உள்ள அனைத்து அரிசி ஆராய்ச்சி நிலையங்களும் முழு மூச்சில் செயல்பட்டு வெளியிட்ட வீரிய ஒட்டு எதுவுமே நல்ல பலன் தரவில்லை. குறிப்பாக, கிழக்குப் பிராந்தியத்தில் தோல்வியே. சுமார் 43 வீரிய ஒட்டு நெல் ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

தோல்விக்கு என்ன காரணம் என்று யோசித்தபோது, இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட விதை ரகங்கள் முதற்கண் தடுமாறும் தட்பவெப்பத்தைத் தாக்குப் பிடிக்க வேண்டும்.

மழை வெள்ளத்தால் பாதிப்படையாத மடுவு முழுங்கி போன்ற பல ரகங்கள் கங்கைப் பிரதேசங்களில் உண்டு. இதற்கு நேர்மாறாக நீர் இல்லாமல் வறட்சியுறும் சூழ்நிலைக்கு ஏற்ப வறட்சி தாங்கும் நெல்விதை ரகங்களும் உண்டு. குளிரைத் தாங்கி வளரும் நெல் ரகங்களும் உண்டு. உவரைத் தாங்கி வளரும் நெல் ரகங்களும் உண்டு. மானாவாரி ரகங்களும் உள்ளன. மாநில அளவில் புவியியல் தட்பவெப்ப மாற்றங்களை அனுசரித்துப் பயிராகும் விதை ரகங்கள் வீரிய ஒட்டு ரகங்களை விடவும் விளைச்சல் கூடுதலாயுள்ளன.

வீரிய ஒட்டு ரகங்களை சிறு, குறு விவசாயிகளாலும் பழங்குடி விவசாயிகளாலும் ஏற்க முடியாது. வீரிய ஒட்டுரக நெல்லுக்கு ரசாயன உரங்களை அதிகம் பயன்படுத்த வேண்டும். அவற்றின் சாகுபடி அடக்கச் செலவும் அதிகம் என்பதால் கிழக்குப் பிராந்திய விவசாயிகள் ஏற்க மறுக்கின்றனர். எனினும், பணவசதியுள்ள விவசாயிகளுக்கு தட்பவெப்பப் பிரச்னை இல்லாத புவியியல் சூழல் உள்ள நிலங்களில் மட்டுமே சீனாவில் விளையக்கூடிய உற்பத்தித்திறனைப் பெற முடியும், பெற்றும் உள்ளனர். ஆனால், தட்பவெப்பத்தை அனுசரித்து எல்லா நிலங்களுக்கும் பொருந்தும் விதை ரகங்கள்தான் இன்றைய தேவை.

குறிப்பிட்ட சில இடங்களில் மட்டுமே சிறப்பாக விளையும் சீன வீரிய ஒட்டு பெரும்பாலான இடங்களுக்குப் பொருந்தாது. எதிர்பார்க்கும் விளைச்சலைப் பெற முடியாது என்று வேளாண் துறைசார்ந்த விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரிசா மாநிலத்தில் பருவம் - பட்டம் - புவியியல் தட்பவெப்பத்தைத் தாங்கி வளரக்கூடிய பல பாரம்பரிய நெல் விதைகளைப் பயிர் செய்து வெற்றி கண்டுள்ள நடாபர் சாரங்கி

என்ற விவசாயியின் வெற்றிக்கதை விவசாய விஞ்ஞானிகளின் கவனத்தை மிகவும் கவர்வதாயுள்ளது.

77 வயதாகும் சாரங்கி, ஓய்வுபெற்ற பள்ளி ஆசிரியர். கோர்தா மாவட்டத்தில் நரிஷோ என்ற கிராமத்தில் சுமார் 5 ஏக்கர் நிலத்தில் 350 வகையான நெல் ரகங்களை விதைப் பயனுக்கென்றே சாகுபடி செய்து உள்ளூர் மக்களுக்கு வழங்குகிறார். அவருடைய பாரம்பரிய விதைகளை வாங்கிச் செல்லும் விவசாயிகள் நல்ல லாபத்தில் விவசாயம் செய்வதுடன் விளைச்சலும் கணிசமாயுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

பசுந்தாள் உரம், இயற்கை உரம் கொண்டு நெல் பயிரிட்டு விளைந்ததை அறுவடை செய்து அரிசியாக்கி மணக்க மணக்க உண்பதுடன் நல்ல விலைக்கு விற்பனையும் செய்கின்றனர். சாரங்கி சேகரித்துள்ள பாரம்பரிய விதைகளின் பெயர்களில் பக்திமணமும் உண்டு. உதாரணம்: கேதார கௌரி, பத்ம கிஷோரி, கோவிந்த போக், காஸ்காமினி, ரத்னசூடி, கன்னையா பத்தியா, காலாஜீரா (கருப்பு சீரகச்சம்பா). இவரிடம் உள்ள மடுவு முழுங்கி விதைகள் வெள்ளம் வடிந்த பிறகும் 25 கிளைகள் (டில்லர்) வெடித்து வளர்கின்றன. வெள்ளத்தில் தலை உயர்ந்து வளரும். அதேபோல் சாரங்கி வழங்கும் வறட்சியைத் தாங்கி வளரும் நெல் பயிரின் தண்டு மிக மிக உறுதியுடன் விளங்குகின்றனவாம்.

நாட்டுக்கு ஏற்ற விதை நெல் ரகங்களை நல்ல முறையில் தேர்வு செய்து இனப்பெருக்கம் செய்யும் பணியை உண்மையில் வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் செய்ய வேண்டும். பணம் என்னவோ கோடிக்கணக்கில் நாட்டுக்குத் தேவையற்ற விதை ரகங்களைக் கண்டுபிடிப்பதில் பல்கலைக்கழகங்கள் செலவு செய்வது உண்மைதான்.

இதில் வேடிக்கை என்னவென்றால் பணச்செலவே இல்லாமல் சாரங்கி கண்டுபிடித்த நாடியா ஃபூலோ, சோரா, காலாக்கியரி போன்ற மானாவாரி நெற்பயிருக்கு ஈடாகப் பல கோடி ரூபாய் பணம் செலவழித்து இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் கண்டுபிடித்துள்ள ரகங்கள் போட்டி போடவே தகுதி இல்லை என்று அங்குள்ள விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

ஆகவே பணம் முக்கியமல்ல. தேடுதல் வேட்டைதான் இன்றைய தேவை. அரசாங்கம் வழங்கும் விதைகள் வீரியம் இழந்து வரும் சூழ்நிலையில் - இனி எதிர்காலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் சாரங்கிபோல் ஒரு விவசாயி தோன்றிவிட்டால் எத்தனை பஞ்சம் வந்தாலும் அதை இந்தியா தாங்கி நிற்கும். எல்லோருக்கும் எல்லாமும் வழங்கக்கூடிய இந்தியாவில் என்றுமே சோற்றுக்குப் பஞ்சம் வரும் வாய்ப்பே இராது.

தினமலர்

# சர்வதேச அளவில் தேவை உயர்வுநறுமணப் பொருள்கள் ஏற்றுமதி அதிகரிப்பு

மே 26,2011,02:53



கொச்சி:நாட்டின் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி, கடந்த சில வருடங்களாக நல்ல அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது. இது, சர்வதேச அளவில், இந்திய நறுமணப் பொருள்களுக்கு தேவைப்பாடு அதிகரித்து வருவதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.கடந்த ஐந்து வருடங்களில் நாட்டின் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. அளவின் அடிப்படையில் ஏற்றுமதி, 60 சதவீத அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது.நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி வளர்ச்சியில், மிளகாய்,இஞ்சி, பூண்டு, வெந்தயம், மஞ்சள், சீரகம் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களான, கறி மசாலா தூள், புதினா வகை தயாரிப்புகள், நறுமண எண்ணெய் வகைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.சென்ற 2010-11ம் நிதியாண்டில் ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான 11 மாத காலத்தில், இஞ்சி ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் 12 ஆயிரம் டன்னாக, இரு மடங்கு உயர்ந்துள்ளது. இதன் மதிப்பும் 41.51 கோடி ரூபாயில் இருந்து 77.29 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இதே காலத்தில், பூண்டு ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 16 ஆயிரத்து 700 டன்னாகவும், இதன் மதிப்பு 66.54 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.சென்ற நிதியாண்டின் இதே காலத்தில், கறிமசாலா தூள் ஏற்றுமதி, 13 ஆயிரத்து 250 டன்னாகவும். இதன் மதிப்பு, 178.75 கோடி ரூபாயாகவும் உள்ளது. இதே வகையில், நறுமண எண்ணெய் வகைகள் மற்றும் ஓலியோரெசின்ஸ் ஏற்றுமதி, அளவின்

அடிப்படையில், 6,800 டன்னாகவும்,இதன் மதிப்பு 803 கோடி ரூபாயாகவும் உள்ளது. மிளகு ஏற்றுமதி 16 ஆயிரத்து 600 டன்னாக உள்ளது. இதன் மதிப்பு 334.62 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. மஞ்சள் ஏற்றுமதி 42 ஆயிரத்து 500 டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில், 608.85 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.கடந்த சில ஆண்டுகளாக, உலகளவில் இந்திய நறுமணப் பொருள்களுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. ஏற்றுமதியாகும் நறுமணப் பொருள்கள், அளவு மற்றும் மதிப்பின் அடிப்படையில் சிறப்பான வளர்ச்சி கண்டு வருவது குறிப்பிடத்தக்கது.சென்ற 2010-11ம் நிதியாண்டில் ஏப்ரல் முதல் பிப்ரவரியிலான 11மாத காலத்தில், நாட்டின் நறுமணப் பொருள்கள் மற்றும் அது சார்ந்த பொருள்களின் ஏற்றுமதி, 6,030.74 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இது, கடந்த 2005-06ம் நிதியாண்டில் இதே காலத்தில், 2,100 கோடி ரூபாயாக இருந்தது. ஆக, நாட்டின் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி, கடந்த 5 ஆண்டுகளில், மூன்று மடங்கு அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது .கடந்த ஐந்தாண்டுகளில் மொத்த நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியில், மிளகாய் பங்களிப்பு மிக அதிக அளவில் உள்ளது. சென்ற 2010-11ம் நிதியாண்டில், சென்ற பிப்ரவரி வரையிலான 11 மாத காலத்தில் மிளகாய் ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில் 1,379.51 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. கடந்த 2005-06ம் முழு நிதியாண்டில், இது 362 கோடி ரூபாய் என்ற அளவில் இருந்தது. இதே காலத்தில், அளவின் அடிப்படையில் மிளகாய் ஏற்றுமதி, 1 லட்சத்து 3 ஆயிரத்து 11 டன்னில் இருந்து, 2 லட்சத்து 18 ஆயிரத்து 500 டன்னாக வளர்ச்சி கண்டுள்ளது.சென்ற 2010-11 முழு நிதியாண்டில் நாட்டின் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி 150 கோடி டாலராக (6,900 கோடி ரூபாய்) இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**நடப்பு பருவத்தில் கூடுதலாக பருத்தி ஏற்றுமதி செய்ய பரிசீலனை**

மே 26,2011,02:48



புதுடில்லி:விவசாயிகள் மற்றும் பஞ்சு ஆலைகள் தரப்பில் கொடுக்கப்பட்ட நெருக்கடியால், நடப்பு பருவத்தில், கூடுதலாக 15 லட்சம் பொதிகள் பருத்தி ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதி வழங்க உள்ளதாக மத்திய ஜவுளி துறை வட்டாரங்கள் தெரிவித்தன.உள்நாட்டில் பருத்தி விலை வீழ்ச்சி அடைந்து வருவதால், பருத்தி ஏற்று மதிக்கான வரம்பை உயர்த்துவது குறித்து மத்திய அரசு உடனே முடிவெடுக்க வேண்டும் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர்சரத்பவார் கோரிக்கை விடுத்துள்ளார்.நடப்பு பருவத்தில் நாட்டின் பருத்தி உற்பத்தி மிகச் சிறந்த அளவில் அதிகரித்துள்ளது. இதனால் கடந்த இரண்டு மாதங்களாக உள்நாட்டில் பருத்தி விலை சரிந்து வருகிறது. வரும் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில்சந்தையில் பருத்தி வரத்து அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே நூற்பாலைகள் மற்றும் ஏற்றுமதியாளர்களிடம் போதிய அளவிற்கு பருத்தி இருப்பு உள்ளது. இந்நிலையில் புதிய பருத்தி வரத்து அதிகரித்தால், விலை மேலும் குறையும் என்று இத்துறைசார்ந்தவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.உள்நாட்டில் ஏற்றுமதிக்கான ஒதுக்கீடு போக, வர்த்தகர்கள், நூற்பாலைகள், ஏற்றுமதியாளர்களிடம் 45லட்சம் கச்சா பருத்தி உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது தவிர, குஜராத், மகாராஷ்ட்ரா, மத்தியபிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகளிடம் 20 லட்சம் பருத்தி பொதிகள் உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. இதனால் கூடுதலாக 15 லட்சம் பருத்தி பொதிகளை ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கினால் கூட உள்நாட்டில் பருத்திக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்று இந்திய பருத்தி சங்கம் தெரிவித்துள்ளது. உள்நாட்டில் போதிய அளவிற்கு பருத்தி இருப்பு உள்ளதால், கூடுதலாக பருத்தி ஏற்றுமதி மேற்கொள்ள அனுமதி வழங்க வேண்டும் என்று இச்சங்கம் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. மேலும், பருத்தி ஏற்றுமதி கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என் றும், கட்டுப்பாடற்ற பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்காவிட்டால், இருப்பு அதிகரித்து மேலும் விலை குறையும் என்றும், இதனால் பருத்தி விவசாயிகள் உள்பட பருத்தி துறையே பாதிப்பிற்கு உள்ளாகும் என்றும் இந்திய பருத்திசங்கத் தலைவர் திரன் ஷா எச்சரித்துள்ளார்.இதனிடையே டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய வேளாண் துறை அமைச்சர்சரத்பவார், மத்திய அர", பருத்தி ஏற்றுமதி வரம்பை உயர்த்துவது குறித்து விரைந்து முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தற்போதுசர்வதேசசந்தையில் ஒரு டன்சர்க்கரை விலை 750 டாலரில் இருந்து 620 டாலராக குறைந்துள்ளது.சர்க்கரை ஏற்றுமதிக்கு மத்திய அரசு காலதாமதமாக அனுமதி அளித்த தால், வர்த்தகர்கள்,சர்க்கரையை ஏற்றுமதி செய்ய இயலாத நிலையில் உள்ளனர். இது போன்ற நிலையை பருத்தி ஏற்றுமதியாளர்கள்சந்திப்பதை தவிர்க்கும் பொருட்டு, பருத்தி ஏற்றுமதி வரம்பை உயர்த்துவது குறித்து மத்திய அர" உடனே முடிவெடுக்க வேண்டும் என்றுசரத்பவார் கேட்டுக் கொண்டார். இதையடுத்து,விரைவில் பருத்தி ஏற்றுமதி வரம்பை உயர்த்துவது குறித்த அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப் பாண்டு 55 லட்சம் பருத்தி பொதிகளை (ஒரு பொதி -170 கிலோ) ஏற்றுமதி செய்ய மத்திய

அர" அனுமதி வழங்கியுள்ளது. உள்நாட்டை விடசர்வதேசசந்தையில் பருத்தியின் விலை 30சதவீதம் கூடுதலாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.இந்நிலையில், 'நடப்பு பருவத்தில் கூடுதலாக 15 லட்சம் பருத்தி பொதிகள் ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி வழங்கும்' என்று ஜவுளி துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

**எள் வித்துக்களை உடனே விற்க வேண்டும் விவசாய பல்கலைக்கழகம் பரிந்துரை**

மே 26,2011,02:42



சென்னை:'எள் அறுவடை செய்துள்ள விவசாயிகள், உடனடியாக விற்று விட வேண்டும். விலை உயரும் என்று கருதி இருப்பு வைக்க கூடாது' என, தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.நடப்பு பருவத்தில், எள் விளைச்சல் போதிய அளவிற்கு இல்லை. பூச்சி தாக்குதல், தரமான எள் வித்துகள் கிடைக்காதது, கூலி தொழிலாளர்கள் பற்றாக்குறை போன்ற காரணங்களால், எள் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.பொதுவாக, ஒரு ஏக்கர் நிலத்தில், 350 முதல் 400 கிலோ எள் விளையும். ஆனால், நடப்பு பருவத்தில், பூச்சி தாக்குதல் மற்றும் தரமான விதை கிடைக்காதது போன்ற காரணங்களால், விளைச்சல் 240 முதல் 300 கிலோவாக குறைந்துள்ளது. ஜனவரி மாதத்தில் ரபி பருவத்தில் பயிரிடப்பட்ட எள், தற்போது அறுவடை முடிந்துசந்தைக்கு வரத் தொடங்கி யுள்ளது.அடுத்த, இரண்டு மாதங்களுக்கு, ஒரு கிலோ எள், 44 முதல் 49 ரூபாய் வரை விலை போகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு மேல் விலை உயர வாய்ப்பிருக்காது என்று கருதப்படுகிறது.அதனால், விவசா யிகள் எள்ளை இருப்பு வைக்காமல், உடனடியாக விற்று வருவாய் பார்ப்பதே நல்லது என, தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகம்

தெரிவித்துள்ளது.தமிழகத்தில், 63 ஆயிரம் ஹெக்டர் நிலப்பரப்பில் எள் விவசாயம் மேற் கொள்ளப்படுகிறது.சராசரியாக, ஒரு எக்டருக்கு 506 கிலோ எள் விளையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எள் விளைச்சல், ஆண்டுக்கு, 31 ஆயிரம் டன் என்ற அளவில் உள்ளது. ஈரோடு, விழுப்புரம், தஞ்சாவூர், கரூர், கட லூர், தூத்துக்குடி, சேலம் ஆகிய மாவட்டங்களில் அதிகளவில் எள் உற்பத்தி செய்யப்படுகிறது. ஜனவரி - பிப்ரவரி, ஜூலை - ஆகஸ்ட் ஆகிய இரண்டு பருவங்களில், தமிழகத்தில், எள் விளைச்சல் செய்யப் படுகிறது.

**மல்பெரி செடிகளில் இலைப்பேன் தாக்குதல்: நோய் தடுப்பு மேற்கொள்ள அறிவுரை**

பதிவு செய்த நாள் : மே 26,2011,02:18 IST

உடுமலை : கோடை காலத்தில் மல்பெரி செடிகளில் பரவலாக இலைப்பேன் தாக்குதல் காணப்படுவதால் உற்பத்தியாளர்கள் தேவையான நோய்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. உடுமலை பட்டுவளர்ச்சி துறை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டு பகுதிகளில் 3 ஆயிரத்து 500 ஏக்கருக்கும் அதிகமாக மல்பெரி பயிரிடப்பட்டு நாள்தோறும் ஒரு டன் வரை பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்படுகிறது. பட்டு வளர்ச்சி துறை மற்றும் மத்திய பட்டு வாரிய அதிகாரிகள் கூறியதாவது:மே, ஜூன், ஜூலை மாதங்களில் மல்பெரி செடியில் இலைப்பேன் தாக்குதல் காணப்படும். கண்ணுக்கு தெரியாத அளவிற்கு உள்ள இந்த சிறிய பூச்சி இலைகளின் அடிப்பாகத்தில் தங்கி சாற்றை உறிஞ்சும். இரண்டு வார வாழ்க்கை சுழற்சி உடைய இந்த பூச்சி இளம் மற்றும் முதிர்ந்த பருவத்தில் மல்பெரி செடி இலைகளிலிருந்து சாற்றை உறிஞ்சும். இதனால், இலைகளின் தரம் குறைந்து அவற்றை பட்டுப்புழுக்களுக்கு உணவாக அளிக்கும் போது அவற்றை புழுக்கள் உண்ண முடியாது. மேலும், புழுக்களுக்கு "பிளாச்சரி' போன்ற நோய்கள் ஏற்பட பூச்சி தாக்கிய இலைகள் காரணமாக அமையும்.இலைப்பேன் தாக்கிய இலைகள் தீயில் கருகியது போல காணப்படும். இத்தாக்குதலால் மல்பெரி இலை மற்றும் பட்டுக்கூடு உற்பத்தியில் பாதிப்பு ஏற்படும். இலைப்பேன் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் 3 மில்லி வேப்பெண்ணெய் அல்லது புங்க எண்ணெய் கரைக்கும் திரவத்துடன் (சோப்பு தண்ணீர்) கலந்து ஏக்கருக்கு 250 மில்லி என்ற வீதத்தில் தெளிக்க வேண்டும். இந்த கரைசலை செடிகளுக்கு தெளிக்க புழு வளர்ப்பு மனைகளில் மருந்தடிக்க பயன்படுத்தும் தெளிப்பான்களை பயன்படுத்த வேண்டும். இலையின் அடிப்பாகத்தில் கரைசல் படுமாறு தெளிக்க வேண்டும். மல்பெரி தோட்டத்தில் மஞ்சள் நிற அட்டைகளில் கிரீஸ் தடவி ஒரு ஏக்கருக்கு 10 முதல் 20 இடங்களில் நட வேண்டும்.மஞ்சள் நிறத்தில் ஈர்க்கப்படும் இலைப்பேன் பூச்சிகள் கிரீஸில் ஒட்டிக்கொள்ளும். மேலும், உயிரியல் காப்பான் முறையில், கண்ணாடி பூச்சி எனப்படும்

க்ரோகோடா எனப்படும் ஊன்விழுங்கியை ஏக்கருக்கு ஆயிரம் முட்டை வீதம் விடலாம்.இவ்வாறு தெரிவித்தனர்.

**ஏத்தன் பழம் ஏற்றுமதி அதிகரிப்புஉற்பத்தி குறைவால் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : மே 26,2011,03:24 IST

மார்த்தாண்டம்:ஏத்தன் வாழைப்பழம் வெளிநாடு மற்றும் கேரளாவிற்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தேவைக்கு ஏற்ப உற்பத்தி இல்லாததால் குமரி மாவட்டத்தில் விலை அதிகரித்துள்ளது.கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் வாழை விவசாயம் சிறப்பாக நடந்து வருகிறது. ரப்பர் விலை ஏற்றத்தால் குமரி மாவட்டத்தில் விவசாய விளைநிலங்கள் ரப்பர் தோட்டங்களாக மாறி வருகிறது. இதனால் மாவட்டத்தில் வாழை விவசாயம் குறைந்து வருகிறது. ஆனால் வாழை பழங்களின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.கேரளாவை சேர்ந்த தனியார் நிறுவனங்கள் மார்த்தாண்டம், குழித்துறை, குலசேகரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் அலுவலகங்கள் அமைத்து தோட்டங்களில் நேரடியாக சென்று ஏத்தன் தார்களை மொத்தமாக வாங்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன.
இதை போல் கேரளாவில் ஏத்தன், செந்துழுவன் பழங்களின் தேவையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. குழித்துறை வழியாக தினசரி நூற்றுக்கும் மேற்பட்ட லாரிகளில் ஏத்தன் மற்றும் செந்துழுவன் தார்கள் காய்களாகவும், பழங்களாகவும் கேரளா கொண்டு செல்லப்படுகிறது. இதனால் ஏத்தன், செந்துழுவன் வாழை பழங்களின் விலை ஜெட் வேகத்தில் ஏறி வருகிறது.மார்த்தாண்டம் மார்க்கெட்டில் தரமான நூறு ஏத்தன் பழங்கள் 400 முதல் 700 ரூபாய் வரை விற்பனையாகிறது. இதை போல் தரமான நூறு செந்துழுவன் பழங்கள் 500 முதல் 800 ரூபாய் வரை விற்பனையாகிறது. வாழை பழங்கள் விலை அதிகரித்தாலும் உள்ளூர் பயன்பாடு மற்றும் ஏற்றுமதி செய்வதற்கு என தேவையும் அதிகமாக உள்ளது.ஆனால் உற்பத்தி குறைந்து வருகிறது. இதனால் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

**கொப்பரை கொள்முதல் மையம் மடத்துக்குளத்தில் அமைக்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : மே 26,2011,02:18 IST

மடத்துக்குளம் : "மடத்துக்குளம் ஒழுங்கு முறை கூட வளாகத்தில் கொப்பரை கொள்முதல் மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்', என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். மடத்துக்குளம் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை பயிரிடப் பட்டுள்ளது. இங்கு பல பகுதியிலுள்ள விவசாயிகள் கொப்பரை உற்பத்தி செய்து கூடுதல் லாபத்துக்கு விற்பனை செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். இப்பகுதியில் கொப்பரை உற்பத்தி செய்ய 30 க்கும் மேற்பட்ட

தனியார் கொப்பரை களங்கள் உள்ளன. விவசாயிகள் கொப்பரை உற்பத்தி செய்ய அரசு சார்பில் களம் இல்லை. விவசாயிகள் தாங்களே களம் அமைத்து கொப்பரை உற்பத்தி செய்தாலும் போதிய விற்பனை சந்தை இல்லை. பொள்ளாச்சி அல்லது காங்கேயம், அவல் பூந்துறை பகுதிக்கு கொப்பரையை கொண்டு செல்ல வேண்டிய நிலை உள்ளது. இதனால், போக்குவரத்து செலவு மற்றும் அலைச்சல் காரணமாக விவசாயிகளுக்கு போதிய வருவாய் கிடைக்காமல் பாதிக்கப்படுகின்றனர். இதனை பயன்படுத்தி குறைந்த விலைக்கு தனியார் எண்ணெய் நிறுவனங்கள் கொப்பரையை கொள்முதல் செய்கின்றனர். இப்பிரச்னைக்கு தீர்வாகமடத்துக்குளம் பகுதியில் அரசு கொப்பரை கொள்முதல் மையம் துவங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து விவசாயிகள் கூறியதாவது: மடத்துக்குளம் ஒழுங்கு முறை விற்பனை கூட வளாகத்தில் மையம் துவங்குவதற்கான இடவசதி உள்ளது. வளாகத்தில் பல ஏக்கர் நிலம் தற்போது வீணாக முட்புதர்கள் மண்டி கிடக்கிறது. இந்த நிலத்தை சுத்தம் செய்து களம் அமைத்தால் சுற்றுப்பகுதியிலுள்ள விவசாயிகள் எளிதாக கொப்பரை உற்பத்தி செய்யலாம். எனவே இங்கு கொப்பரை களம் மற்றும் கொள்முதல் மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்', என்றனர்.

**பருத்தி சாகுபடியில் புதிய தொழில்நுட்பம் கருத்தரங்கில் அறிமுகம்**

பதிவு செய்த நாள் : மே 26,2011,03:09 IST

அரியலூர்: ""பருத்தி சாகுபடியில் புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தி அதிக லாபமடையலாம்," என்று தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார் கூறினார். பருத்தி சாகுபடியில் புதிய தொழில்நுட்பம் குறித்து அரியலூரில் நடந்த வேளாண் கருத்தரங்கில் போல்கார்டு தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார் கூறியதாவது:அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகள் பெருமளவில் பருத்தி சாகுபடி செய்கின்றனர். துவக்கத்தில் சாதாரண பருத்தி பயிரிட்டு, புழு பிரச்னையால் நஷ்டம் அடைந்தனர். 2002ம் ஆண்டில், போல்கார்டு எனப்படும் புதிய தொழில் நுட்பத்துடன் கூடிய பருத்தி அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தொழில்நுட்பம் மூன்று வகையான காய்ப்புழுக்களை கட்டுப்படுத்தியது. காவடிப்புழு, கம்பளிப்புழு மற்றும் புரோட்டீனியா புழுவை கட்டுப்படுத்த முடியவில்லை. தொடர்ந்து 2006ல் அறிமுகப்படுத்தப்பட்ட போல்கார்டு-2 எனப்படும் தொழில்நுட்பம், மூன்று வகையான காய்ப்புழுக்களையும் 20 மடங்கு அதிக சக்தியுடன் கட்டுப்படுத்தியது. பருத்தி மகசூல் 12 முதல் 15 குவிண்டால் வரை அதிகரித்துள்ளது. தற்போது பருத்தி சாகுபடியில் களைப்பிரச்னை உள்ளது. இப்பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் மகிகோ-மான்சாண்டோ பயோடெக் நிறுவனம் போல்கார்டு 2 ரவுண்டப் ரெடிஃபிளக்ஸ் காட்டன் எனப்படும் புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தவுள்ளது. இந்த தொழில் நுட்பத்தின் மூலம் பருத்தியின் மீது நேரடியாக ரவுண்டப் களை கொல்லியை தெளிப்பதன் மூலம், பருத்திக்கு

எந்தவித பாதிப்பும் இல்லாமல் களை கட்டுப்படுத்தப்படும். மகசூல் மேலும் இரண்டு மடங்கு கிடைக்கும். போல்கார்டு-2 பருத்தி சாகுபடி மிகவும் எளிமையானதுடன் லாபகரமானதாக உள்ளது. கடந்த ஆண்டு போல்கார்டு-2 பருத்தியின் விலை ஒரு குவிண்டாலுக்கு அதிகபட்சம் 7,000 ஆயிரம் ரூபாய் வரை கிடைத்தது. அனைத்து சாகுபடி செலவும் போக சராசரியாக ஏக்கருக்கு 60 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கிறது. கடந்த ஆண்டு அரியலூர் மாவட்டத்தில் 32 ஆயிரம் ஏக்கரிலும், பெரம்பலூர் மாவட்டத்தில் 75 ஆயிரம் ஏக்கரிலும் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. வரும் ஆவணி பட்டத்தில் போல்கார்டு-2 பருத்தி சாகுபடி செய்து, அதிக லாபம் அடையலாம். இவ்வாறு அவர் கூறினார். பெரம்பலூர் கோட்ட மேலாளர் வெங்கடேசன் உடனிருந்தார்.

**அக்னி அனலை தணித்த பலத்த மழை : நெல், மஞ்சள் விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மே 26,2011,01:58 IST

ஈரோடு: அக்னி அனலை தணிக்கும் வகையில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை வரை ஈரோடு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பலத்த மழை பெய்தது. ஈரோடு மாவட்டத்தில் 2011 ஜனவரியில் ஒரு நாளும், ஃபிப்ரவரியில் நான்கு நாளும், மார்ச்சில் இரண்டு நாளும் லேசான மழை பெய்தது. ஏப்ரலில் 11 நாட்கள் பரவலாக மழை பெய்தது. மே மாதத்தில் 2, 4, 21 ஆகிய தேதிகளில் ஈரோடு, கோபி என ஓரிரு இடங்களில் மட்டும் லேசான மழை பெய்தது. மே 4 முதல் அக்னி நட்சத்திரத்தின் தாக்கத்தால் வெயில் அனலாக மாறியது. இதை தணிக்கும் வகையில் நேற்று முன்தினம் இரவு இரண்டு மணி முதல் நான்கு மணி வரையும், காலை 6.30 முதல் 7.30 மணி வரையும் பலத்த மின்னல், இடியுடன் மழை பெய்தது. ஒரே நாள் பெய்த இந்த மழையால் ஈரோடு மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் அக்னி தணிந்து, குளிர்ந்த காற்று வீசுகிறது. மே 28ம் தேதி அக்னி நட்சத்திரம் முடிய உள்ள நிலையில் இந்த மழை மக்களை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது. நேற்று காலை எட்டு மணி நிலவரப்படி ஈரோடு 82 மி.மீட்டர், பெருந்துறை 24, பவானி 16, கோபி 7, தாளவாடி 7, கொடுமுடி 1 மி.மீட்டர் என பரவலாக மழை பதிவானது. இம்மழையால், பெருந்துறை அருகே திங்களூரில் மின்னல் தாக்கி நேற்று முன்தினம் இரவில் இரண்டு காளைகள் இறந்தன. ஈரோடு சூரம்பட்டி நால்ரோட்டில் ஒரு மரம் சாய்ந்தது. உடனடியாக மின்வாரியம் மற்றும் மாநகராட்சி ஊழியர்கள் வந்து அம்மரத்தை அகற்றினர். ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர் அணை திறக்கப்பட்டு 6,000 ஹெக்டேரில் குறுவை நெல் மற்றும் 7,000 ஹெக்டேரில் மஞ்சள், 20 ஆயிரம் ஹெக்டேரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நெல் நாற்று விடுதல் மற்றும் நடவுப்பணி செய்வோருக்கும், மஞ்சள் சாகுபடி

செய்வோருக்கும் இந்த மழை உகந்தது என வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர். இம்மழை மேலும் சில நாட்களுக்கு நீடித்தால் விவசாயிகள், தங்கள் வயலில் ஆயத்தப்பணிகளை எளிதாக மேற்கொள்ள வாய்ப்பாகும், என கருதுகின்றனர்.

**கோடை மழை ஈரத்தை பயன்படுத்துவதில்...ஆர்வம்: மர வள்ளி நடவில் விவசாயிகள் தீவிரம்**

பதிவு செய்த நாள் : மே 25,2011,21:56 IST

தியாகதுருகம் : எதிர்பாரமல் பெய்த கோடை மழை ஈரத்தை பயன்படுத்தி ஆர்வத்துடன் தியாகதுருகம் பகுதியில் மரவள்ளி கிழங்கு நடவு செய்யும் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். தமிழகத்தில் சில வாரங்களுக்கு முன் வெப்ப சலனம் காரணமாக பல இடங்களில் நல்ல மழை பெய்தது. அந்த நேரத்தில் தியாகதுருகம் பகுதியில் பெய்த திடீர் கோடை மழையால் ஏரி, குளங்களில் நீர்மட்டம் உயர்ந்தது. பருவமழை காலங்களை போல் விளை நிலங்களில் தண்ணீர் தேங்கியது. களைகள் முளைவதை தடுக்கும் வகையில் மழை ஈரத்தை பயன்படுத்தி பல விவசாயிகள் கோடை உழவு செய்தனர். தற்போது தியாகதுருகம் பகுதியில் கரும்பு சாகுபடி செய்வதில் அதிக விவசாயிகள் ஆர்வம் காட்டி வந்தாலும், மரவள்ளி கிழக்கு கடந்த சில ஆண்டுகளாக நல்ல விலை கிடைப்பதால் சில விவசாயிகள் இதனை தொடர்ந்து பயிரிட்டு லாபம் சம்பாதித்து வருகின்றனர். இந்த ஆண்டும் மரவள்ளி பயிரிடுவதில் ஆர்வம் காட்டத் துவங்கியுள்ளனர். கரும்பு பயிர் போல் இல்லாமல் குறைவான தண்ணீர் பாய்ச்சி, குறைந்த ஆட்களை கொண்டு பராமரித்தாலே மரவள்ளி நல்லபலனை கொடுக்கிறது. தியாகதுருகம் பகுதியில் செம்மண் வளம் நிறைந்த நிலங்கள் அதிகம் உள்ளதால் கிழங்கு நல்ல ஊட்டமாக வளர்ந்து கூடுதல் பலனை கொடுத்து வருகிறது. கிழங்கு முற்றியதும் "சேகோ' தொழிற்சாலை நிர்வாகமே புரோக்கர்கள் மூலம் ஆட்களை அனுப்பி அறுவடை செய்வதால் வேலை மிச்சமாகிறது. அலைச்சல் இல்லாமல் தொழிற்சாலை நிர்வாகமே நேரடியாக வந்து கிழங்கை வாங்கிச் செல்வதால் லாபமும் அதிகம் கிடைக்கிறது. கரும்பு சாகுபடியை பொறுத்தவரை குறித்த நேரத்தில் அதிக ஆட்களை கொண்டு அறுவடை செய்வதில் சிக்கல் நீடிக்கிறது. விவசாயிகளுக்கு சிரமமின்றி தொழிற்சாலை நிர்வாகமே அறுவடை செய்வதால் இதனை பயிரிடுவதில் விவசாயிகளுக்கு ஆர்வம் ஏற்பட்டுள்ளது. வழக்கமாக ஜூன் மாதத்தில் தொடங்கும் தென்மேற்கு பருவமழை காலத்தில் மரவள்ளி நடவு செய்வது வழக்கம். தற்போது எதிர்பாராமல் கடந்த சில வாரங்களுக்கு முன் பெய்த கனமழையால் நிலத்தை பண்படுத்தி, கிழங்கு குச்சிகளை நடவு செய்ய ஏற்ற சூழல் ஏற்பட்டுள்ளது. அவ்வப்போது மாலை நேரங்களிலும் லேசான மழை பெய்து வருவது கிழங்கு நடவு செய்ய சாதகமாக உள்ளது.இதனை பயன்படுத்தி

விவசாயிகள் பலரும் தியாகதுருகம் பகுதியில் மரவள்ளி கிழங்கு நடவு பணியில் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ளனர்.

**மானா வாரியில் எள் பயிரிட விவசாயிகளுக்கு வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : மே 25,2011,21:59 IST

சங்கராபுரம் : மானாவாரியில் அதிகளவில் எள் பயிரிடுமாறு விவசாயிகளுக்கு வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து சங்கராபுரம் வேளாண்மை உதவி இயக்குனர் ஆனந்தன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: சங்கராபுரம் பகுதியில் தற்போது கோடை மழை பரவலாக பெய்துள்ளது. இந்த மழையை பயன்படுத்தி மானாவாரியில் எள் சாகுபடி செய்யலாம். விஞ்ஞான தொழில்நுட்பத்தை அதிக அளவில் பின்பற்றினால் அதிக மகசூல் பெறலாம். தற்போது எள்ளில் ஏக்கருக்கு சராசரியாக 125 லிருந்து 140 கிலோ மகசூல் தான் பெறமுடிகிறது. பரிந்துரைக்கும் முக்கிய தொழில் நுட்பங்களை பின்பற்றினால் ஏக்கருக்கு 200 லிருந்து 250 கிலோ வரை மகசூல் பெறலாம். ஏக்கருக்கு 2 கிலோ வீதம் டிஎம்வி.3., விஆர்ஐ 1, கோ.1 ஆகிய ரகங்களில் ஒன்றை தேர்வு செய்து தேவையான மணலுடன் கலந்து சீராக விதைக்க வேண்டும். விதை மூலம் பரவும் நோயை தடுக்க ஒரு கிலோ விதையுடன் 2 கிராம் கார்பென்டாசிம் கலந்து விதைக்க வேண்டும். விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன்பு விதை நேர்த்தி செய்ய வேண்டும். பயிர்களுக்கு இயற்கையாக தழை சத்து கிடைக்க ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன் ஒரு பொட்டலம் அசோக்பைரில்லம் கலந்து விதைக்க வேண்டும். ஏக்கருக்கு தொழுஉரமாக 5 டன் தொழு உரமிட வேண்டும். விதைத்த 15 வது நாள் செடிக்கு செடி 15 மீ., இடைவெளி இருக்கும்படி வைத்து மற்ற செடிகளை அகற்ற வேண்டும். எள் பயிரில் பயிர் களைதல் முக்கிய பணியாகும். இவ்வாறு செய்யாவிடில் மகசூல் குறையும். இந்த கோடை மழையை பயன்படுத்தி சங்கராபுரம் பகுதியில் உள்ள விவசாயிகள் மானாவாரியில் எள் சாகுபடி செய்து அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு வேளாண்மை உதவி இயக்குனர் ஆனந்தன் கூறியுள்ளார்.

**கால்நடை ஆஸ்பத்திரியில்லை குரங்கனி விவசாயிகள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : மே 25,2011,23:19 IST

போடி : போடிஅருகே குரங்கனி மலைக்கிராமத்தில் கால்நடை ஆஸ்பத்திரி இல்லாததினால் கால்நடைகளுக்கு சிகிச்சை மேற்கொள்ள முடியாமல் பொதுமக்கள் சிரமம் அடைந்து

வருகின்றனர். போடியிலிருந்து 16 கி.மீ., தூரத்தில் குரங்கனி மலைக்கிராமம் அமைந்தள்ளது. கொட்டகுடி, நரிப்பட்டி, காரிப்பட்டி, முட்டம், முதுவாக்குடி உள்ளிட்ட மலைக்கிராமங்கள் அடங்கியுள்ளன. இப்பகுதியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகளை இப்பகுதி மக்கள் வளர்த்து வருகின்றனர். விவசாயம், கால்நடைகள் வளர்ப்பதையே முக்கிய தொழிலாக கொண்டுள்ளனர். கால்நடைகள் நோய்வாய் ஏற்பட்டால் சிகிச்சை மேற்கொள்ள கால்நடை ஆஸ்பத்திரி இங்கில்லை. இதனால் 16 கி.மீ., கடந்து போடி சென்று சிகிச் சை பெற வேண்டியுள்ளது. கால்நடை மருத்துவர்களும் இப்பகுதிகளுக்கு செல்வதில்லை. இப்பகுதியில் உள்ள பெரும்பாலான கால்நடைகளுக்கு வாய்ப்புண், கழுத்தில் கட்டிகளுக்கு போடிக்கு கொண்டு வந்து சிகிச்சை அளிக்க முடியாத நிலையில் சிரமம் அடைகின்றனர். மலைவாழ் மக்களின் நலன் கருதி குரங்கனியில் கால்நடை ஆஸ்பத்திரி அல்லது வாரம் மூன்று முறையாவது டாக்டர்கள் சென்று கால்நடைகளுக்கு சிகிச்சை மேற்கொள்ளும் வகையில் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

## ***கடந்த ஐந்து ஆண்டுகளில் நாட்டின் நறுமண பொருள்கள் ஏற்றுமதி 3 மடங்கு அதிகரிப்பு***



*எஸ் சனந்தகுமார்*

*கொச்சி*

*கடந்த ஐந்து ஆண்டுகளில், மிளகாய், மஞ்சள், சீரகம், வெந்தயம் உள்ளிட்ட நறுமண*

பொருள்கள் ஏற்றுமதி ரூபாய் மதிப்பின் அடிப்படையில் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது.

அளவு அடிப்படையில்...

கடந்த 2005–06–ஆம் நிதி ஆண்டின் முதல் 11 மாதங்களில் (ஏப்ரல் – பிப்ரவரி) ரூ.2,100 கோடி மதிப்பிற்கு நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தன. இது, சென்ற 2010–11–ஆம் நிதி ஆண்டில் முதல் 11 மாதங்களில் ரூ.6,030.74 கோடியாக உயர்ந்துள்ளது. ஆக, ஐந்து ஆண்டுகளில் ஏற்றுமதி மூன்று மடங்கு உயர்ந்துள்ளது. அளவின் அடிப்படையில் 60 சதவீதம் அதிகரித்து 4.71 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, இந்திய நறுமண பொருள்களுக்கு வெளிநாடுகளில் நல்ல விலை கிடைத்துள்ளதை எடுத்துக்காட்டுகிறது.

மிளகாய் – மஞ்சள்

ஐந்து ஆண்டுகளில் மிளகாய், மஞ்சள், சீரகம், மற்றும் கறி மசாலா, நறுமண எண்ணெய் உள்ளிட்ட மதிப்புக் கூட்டப்பட்ட நறுமண பொருள்கள் ஏற்றுமதியில் வியத்தகு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்திய நறுமண பொருள்களை வாங்குவதில் வெளிநாட்டினரின் ஆர்வம் அதிகரித்து வருகிறது. இதனால், இவற்றிற்கு நல்ல விலை கிடைத்துள்ளது என்று அனைத்திந்திய நறுமண பொருள்கள் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் பிலிப் குருவில்லை தெரிவித்தார்.

மிளகாய் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் இரண்டு மடங்கு அதிகரித்து 1.03 லட்சம் டன்னிலிருந்து 2.19 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. வெளிநாடுகளில் மிளகாய்க்கு நல்ல விலை கிடைக்கிறது. இதனை வெளிப்படுத்துகின்ற வகையில், ரூபாய் மதிப்பு அடிப்படையில் இது 4 மடங்கு அதிகரித்து ரூ.362 கோடியிலிருந்து ரூ.1,379.51 கோடியாக உயர்ந்துள்ளது.

முந்தைய நிதி ஆண்டுடன் ஒப்பிடும்போதும் நறுமண பொருள்கள் ஏற்றுமதியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. முந்தைய நிதி ஆண்டின் முதல் 11 மாதங்களுடன் ஒப்பிடும்போது இது அளவின் அடிப்படையில் 4 சதவீதம் உயர்ந்துள்ளது. டாலர் மதிப்பு அடிப்படையில் 24 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், ரூபாய் மதிப்பு அடிப்படையில் 19 சதவீதம் மட்டுமே உயர்ந்துள்ளது. இது, டாலருக்கு எதிராக ரூபாய் மதிப்பு உயர்வால் ஏற்பட்டுள்ள தாக்கத்தை எடுத்துக்காட்டுகிறது.

சென்ற நிதி ஆண்டின் முதல் 11 மாதங்களில், புதினா எண்ணெய் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 8 சதவீதம் சரிவடைந்து 16,250 டன்னாக குறைந்துள்ளது. அதேசமயம், ரூபாய் மதிப்பு அடிப்படையில் 40 சதவீதம் உயர்ந்து ரூ.1,541.75 கோடியாக அதிகரித்துள்ளது.

இலக்கு

சென்ற 2010–11–ஆம் நிதி ஆண்டிற்கான ஏற்றுமதி குறித்த முழுமையான புள்ளி விவரங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டிருந்த மந்தநிலையால், சென்ற நிதி ஆண்டிற்கு ரூ.5,100 கோடி மதிப்பில் 4.65 லட்சம் டன் நறுமண பொருள்கள் ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், சென்ற நிதி ஆண்டில் 5.03 லட்சம் டன் நறுமண பொருள்கள் ஏற்றுமதியாகி இருக்கும் என்று முதல் கட்ட மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இது, இலக்கைக் காட்டிலும் 8.2 சதவீதம் அதிகமாகும். ரூபாய் மதிப்பு அடிப்படையில் ரூ.5,560.50 கோடியாக இருக்கும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. இது, இலக்கைக் காட்டிலும் 9 சதவீதம் அதிகமாகும். டாலர் மதிப்பு அடிப்படையில் ஏற்றுமதி 150 கோடியாக உயர்ந்து இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் இலக்கைக் காட்டிலும் அதிகமாகும்.

மொத்த ஏற்றுமதி

ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில் நறுமண பொருள்கள் வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த முயற்சிக்கு நல்ல பலன் கிடைத்துள்ளது.

சென்ற 2010–11–ஆம் நிதி ஆண்டில், நாட்டின் மொத்த ஏற்றுமதி கடந்த 63 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 24,590 கோடி டாலராக உயர்ந்து இருந்தது. இதில் நறுமண பொருள்களின் பங்களிப்பு 0.6 சதவீதமாக உள்ளது.

ஏற்றுமதி அதிகரிப்பதால், நாட்டின் பொருளாதாரம் மேம்படும். வர்த்தக பற்றாக்குறை குறையும். நடப்பு நிதி ஆண்டிலும் நறுமண பொருள்கள் ஏற்றுமதியில் விறுவிறுப்பு எற்படும் என நறுமண பொருள்கள் வாரியத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## ஜனவரி–மார்ச் மாத காலத்தில் தேயிலை இறக்குமதி 16 சதவீதம் சரிந்தது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு 2011–ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் (ஜனவரி – மார்ச்), நாட்டின் தேயிலை இறக்குமதி, சென்ற ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 16 சதவீதம் குறைந்து 50.20 லட்சம் கிலோவிலிருந்து 42.30 லட்சம் கிலோவாக சரிவடைந்துள்ளது. நம் நாடு, கென்யா, அர்ஜென்டினா, இங்கிலாந்து, நேபாளம், வியட்நாம், மலாவி மற்றும் சீனா ஆகிய நாடுகளில் இருந்து தேயிலையை அதிக அளவில் இறக்குமதி செய்கிறது. கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலத்தில் கென்யாவிலிருந்து 14.70 லட்சம் கிலோ தேயிலை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது இது 3.5 மடங்கு அதிகமாகும். மொத்த தேயிலை இறக்குமதியில் இந்நாட்டின் பங்களிப்பு 35 சதவீதமாக உள்ளது.

கடந்த 2010–ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் நம் நாடு, வியட்நாமிலிருந்து 16.50 லட்சம் கிலோ தேயிலையை இறக்குமதி செய்தது. இது, நடப்பு ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் 70,000 கிலோவாக குறைந்துள்ளது.

தேயிலை உற்பத்தியில் உலக அளவில் நம் நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. அதாவது, உற்பத்தியில் நம் நாட்டின் பங்களிப்பு 28 சதவீதமாகவும், வர்த்தகத்தில் பங்களிப்பு 14 சதவீதமாகவும் உள்ளது.

## நடப்பு ஆண்டில் 70,000 டன் மாம்பழம் ஏற்றுமதி செய்யப்படும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி

நடப்பு 2011 காலண்டர் ஆண்டில் இந்தியாவிலிருந்து 70,000 டன் மாம்பழம் ஏற்றுமதியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, சென்ற ஆண்டு பருவத்தில்

(மார்ச்–ஜூலை) 65,000 டன்னாக இருந்தது.
ஏற்றுமதிக்கு உகந்த வகையில் உயர்தர மாம்பழங்கள் அதிகம் உற்பத்தியாகியுள்ளதால் நடப்பு ஆண்டில் ஏற்றுமதி அதிகரிக்கும் என சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன. பருவநிலையைப் பொறுத்தே மாம்பழங்களின் தரம் அமைகிறது. இவ்வாண்டில் நம் நாட்டில் மாம்பழங்கள் விளைச்சல் சுமார் 16 லட்சம் டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
நம் நாட்டில் அல்போன்சா மற்றும் கேசர் ஆகிய மாம்பழ ரகங்கள் அதிகம் விற்பனையாகி வருகின்றன. இவை வெளிநாடுகளுக்கும் கணிசமான அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. குறிப்பாக ஐக்கிய அரபு நாடுகள், ஐரோப்பிய நாடுகள் மற்றும் இதர ஆசிய நாடுகள் இந்திய மாம்பழங்களை அதிகம் இறக்குமதி செய்து வருகின்றன.

## தென்னையில் ஊடுபயிராக புதினா சாகுபடி பொள்ளாச்சி விவசாயி சாதனை



தென்னையில் ஊடுபயிராக புதினாவை சாகுபடி செய்து பொள்ளாச்சி எஸ்.குமாரபாளையத்தைச் சேர்ந்த விவசாயி சாதனை படைத்துள்ளார். இது குறித்து விவசாயி முத்துக்குமார் கூறியதாவது:–

தென்னை மரம்

எனது தோட்டத்தில் 8 ஏக்கருக்கு தென்னை மரம் நட்டு உள்ளேன். இந்த தென்னை மரத்துக்கு 30 அடிக்கு 30 அடி இடைவெளியில் ஏக்கருக்கு சுமார் 50 தென்னை மரங்கள் உள்ளன. இதனால் ஒவ்வொரு மரத்துக்கும் இடையே நீண்ட இடைவெளியில் நல்ல முறையில் சூரிய ஒளி மற்றும் காற்றோட்ட வசதியும் கிடைத்து வருகிறது.

இவ்வாறு தென்னை மரங்களுக்கு இடையே உள்ள இடைவெளியில் ஊடுபயிராக புதினாவை சாகுபடி செய்தால் என்ன என்று யோசித்தேன்.

தொடக்கத்தில் 20 சென்ட் நிலத்தில் சோதனை அடிப்படையில் புதினா சாகுபடி மேற்கொண்டேன். அடுத்த கட்டமாக 2 ஏக்கர் அதன் பின்னர் 4 ஏக்கர் என படிப்படியாக அதிகரித்து தற்போது 6 ஏக்கர் பரப்பில் புதினா சாகுபடி செய்து வருகிறேன். தற்போது அதற்கு சொட்டுநீர் பாசனம் மூலம் நீர் பாய்ச்சி வருகிறேன்.

தொழில்நுட்பம்

ஆரம்பத்தில் நல்ல விளைச்சல் கிடைக்காமல் மிகவும் கஷ்டமாக இருந்தது. அனுபவத்தின் மூலம் படிப்படியாக அதன் தொழில் நுட்பத்தை கற்றுக் கொண்டேன். தக்க சமயத்தில் நோய் மற்றும் பூச்சி தடுப்பு முறைகளை கடைப்பிடித்ததன் மூலம் நல்ல தரமான புதினா தழைகளை உற்பத்தி செய்ய முடிந்தது. இதன் காரணமாக வியாபாரிகள் தற்போது என்னை தேடி வந்து புதினாவை வாங்கிச் செல்கின்றனர். மென்த்தா ஸ்பீஷிஸ் என்ற தாவர குடும்பத்தைச் சேர்ந்த இந்த புதினா நீண்டகால வாசனை பயிராகும். இதில் அர்வன்சகா, ஜப்பானிக்கா, பைப்ரகா எனற சிற்றினங்கள் உள்ளன. அர்வன்ச்கா பொதுவாக அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் பரவலாக பயிர் செய்யப்படுகிறது. இந்த பயிரை நடவு வேர்க்குச்சிகள் மூலம் மேற்கொண்டேன்.

நல்ல வடிகால் வசதி

இதற்காக எனது தோட்டத்தில் நல்ல வடிகால் வசதி உள்ள அமிலத் தன்மையுடன் கூடிய வளமான வண்டல் மண் உள்ள இடத்தை தேர்வு செய்தேன். தென்மேற்கு பருவமழை காலமான ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் இந்த பயிர் சாகுபடிக்கு ஏற்ற தருணமாகும்.

இதற்காக நன்கு உழவு செய்து வரப்பு அல்லது பாத்திகள் அமைத்துக் கொண்டேன். இந்த பாத்தியில் 40–க்கு 40 சென்டிமீட்டர் இடைவெளியில் புதினா வேர்களை நட்டேன். அவ்வாறு நடும் பாத்திகளில் சேற்று நடவு முறையை பின்பற்றினேன். இவ்வாறு தொடந்து 4 முறை உழவு மேற்கொண்டேன். கடைசி உழவின் போது ஏக்கருக்கு 10 டன் தொழு உரம் இட்டேன். மேலும் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை 12:24:4 என்ற அளவில் நடவு செய்த 60 மற்றும் 120 நாட்களில் வைத்தேன். மேலும் தழை சத்துகளை 2 தவணகளில் மேல் உரமாக அளித்தேன். நடவு செய்த 5–ம் மாதம் முதல் முறையாக அறுவடைக்கு புதினா தயாரானது. தொடர்ந்து 60 நாட்கள் முதல் 90 நாட்கள் இடைவெளியில் தொடர்ந்து 2 ஆண்டுகளுக்கு அறுவடை மேற்கொண்டேன். ஒரு ஏக்கருக்கு மகசூலாக 6 டன் முதல் 8 டன்

கிடைத்தது.

மழைக்காலங்களில் இலை அழுகல், வேர் அழுகல், பனிக்காலங்களில் பூஞ்சானத் தாக்குதல், இளவேனிற் காலங்களில் இலை கருகல் மற்றும் வாடல் நோய் தோன்றும். இதை கட்டுப்படுத்த தகுந்த முறையில் நீர் மற்றும் உர மேலாண்மையை மேற்கொண்டேன்.

நவீன தொழில்நுட்பம்

பூஞ்சாண நோய்க்கு கார்பண்டிசன் மருந்தை தெளித்து கட்டுப்படுத்தினேன். சுடோமோனஸ், டிரைகோடெர்மா போன்ற உயிர் பூஞ்சணக் கொல்லிகளை பயன்படுத்தி இந்த மூன்று நோய்களையும் கட்டுப்படுத்தினேன். மேலும் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி உற்பத்தியை அதிகரித்து அதை எவ்வாறு சந்தை படுத்துவது என்பதையும் தெரிந்து கொண்டேன்.

இதன் மூலம் விவ்சாயத்தை லாபகரமாக செய்ய முடியும் என்று தெரிந்து கொண்டு அந்த நடைமுறையை தற்போது பின்பற்றி வருகிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஜூன் மாதம் விலை குறைய வாய்ப்பு: அறுவடையான உருளைக்கிழங்கை உடனே விற்பனை செய்வது நல்லது விவசாயிகளுக்கு, வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை

கோவை, மே.26–

ஜூன் மாதம் விலை குறைய வாய்ப்பு உள்ளதால் அறுவடையான உருளைக்கிழங்கை உடனே விற்பனை செய்வது நல்லது என்று விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.

உருளைக்கிழங்கு

உலக அளவில் கிழங்கு வகை பயிர்களில் முக்கிய பயிராக உருளைக்கிழங்கு திகழ்கிறது. ஏறத்தாழ 150 நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் இந்த உருளைக் கிழங்கை 100 கோடிக்கும் மேலான மக்கள் உட்கொள்கின்றன. உலக உற்பத்தியில் சீனா முதல் இடத்திலும் அதை தொடர்ந்து இந்தியா 2–ம் இடத்திலும் உள்ளன. இந்தியாவில் உற்பத்தி ஆகும் உருளைக்கிழங்கு இலங்கை, ஐக்கிய அரபு நாடுகள், மொரீசியஸ், நேபாளம், சிங்கப்பூர், மாலத்தீவு மற்றும் குவைத் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் நீலகிரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் உள்ள மலைப்பிரதேசங்களில் உருளைக் கிழங்கு பயிர் செய்யப்படுகிறது. கடந்த 2010–11 ஆம் ஆண்டு கணக்குப்படி தமிழ்நாட்டில் 6,700 எக்டேர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டு 97,200 டன் உற்பத்தி செய்யப்பட்டு உள்ளது.

விலை நிர்ணயம்

இதன் தரம் அளவு, நிறம் மற்றும் அன்றாட தேவையை பொறுத்து விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. நீலகிரியில் விளையும் உருளைக்கிழங்கு நல்ல தரம் என்பதால் கர்நாடகா மற்றும் வட மாநிலங்களில் விளையும் உருளைக்கிழங்கை விட நல்ல விலை கிடைக்கிறது. இது நல்ல தரமாக உள்ளதால் அதிக நாட்கள் சேமித்து வைக்கலாம். கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கடந்த 20 ஆண்டுகளாக நிலவிய உருளைக்கிழங்கின் விலையை ஆய்வு செய்தது.

விலை முன்னறிவிப்பு

இதன்படி அடுத்த ஜூன் மாதம் வரை 45 கிலோ கொண்ட மூட்டை ஒன்றுக்கு ரூ.625 முதல் ரூ.675 வரை விலை கிடைக்கும் என்று தெரிவித்து உள்ளது. மேலும் இந்த மையமானது கடந்த பிப்ரவரி மாதம் விதைப்பு செய்து அறுவடை சமயமான மே மற்றும் ஜூன் மாதத்தில் விற்பனைக்கு வரும் உருளைக்கிழங்கு கிலோ ஒன்றுக்கு ரூ.14 முதல் ரூ.16 வரை விலை கிடைக்கும் என்று விலை முன்னறிவிப்பு செய்து இருந்தது. தற்போது அறுவடை செய்யப்பட்டு வரும் உருளைக்கிழங்கின் விலை வருகிற ஜூலை மாதத்தில் விலை குறைய வாய்ப்பு உள்ளது. எனவே அறுவடையான உருளைக் கிழங்கை உடனே விற்பனை செய்வது நல்லது என்று விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.

## மகத்தான வருமானம் தரும் மஞ்சள் சாகுபடி

நாட்டின் மொத்த சாகுபடி பரப்பான 1.63 லட்சம் எக்டேரில் இருந்து 7.9 லட்சம் டன் மஞ்சள் (உலர் மஞ்சள்) உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் சுமார் 33 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் 84 ஆயிரம் டன் மஞ்சள் உற்பத்தி செய்யப்படுகிறது. ஈரோடு, கோவை, சேலம், மதுரை, தர்மபுரி, திருச்சி மாவட்டங்களில் மஞ்சள் பரவலாக பயிரிடப்பட்டு வருகிறது. வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் உற்பத்தி

அதிகரித்து வருகிறது.

மஞ்சள் சாகுபடி

கடந்த 2 ஆண்டுகளில் மஞ்சளின் விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. இதனால் விவசாயிகள் லாபம் அடைந்து வருகிறார்கள். மஞ்சளை சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் மஞ்சளை விதைக்காகவா? உலர் மஞ்சளுக்கா? என்று தீர்மானிக்க வேண்டும். இதில் உலர் மஞ்சளில், நிறமிக்காக சில ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

இந்த ரகங்களை உற்பத்தி செய்து அதிக விலை கொடுக்கும் வியாபாரிகளிடம் விற்பனை செய்தால் விவசாயிகள் அதிக லாபம் பெற முடியும். மேலும், அதிக விளைச்சல், உலர்திறன், மஞ்சள் நிறமி ஆகியவற்றை பெற உயர் தொழில்நுட்பங்களை கையாள வேண்டியது அவசியம். கோ–1, பி.எஸ்.ஆர்.–1, பி.எஸ்.ஆர்.–2, ரோமா ஸ்வர்ணா, ரேஷ்மி, கிருஷ்ணா, சுதர்சனா ஆகிய ரகங்கள் சிறந்த மஞ்சள் ரகங்கள் ஆகும். மே, ஜூன் மாதங்கள் மஞ்சள் நடவுக்கு ஏற்ற பருவம் ஆகும். நல்ல வடிகால் வசதியுள்ள செம்மண், இருமண்பாடு நிலம் சாகுபடிக்கு உகந்தது. மண்ணின் கார, அமிலத்தன்மை 6 முதல் 7 சதவீதத்திற்குள் இருக்க வேண்டும். சாகுபடி நிலத்தை மழைக்காலம் தொடங்குமுன் 3, 4 முறை உழுது பண்படுத்த வேண்டும். கடைசி உழவின் போது ஏக்கருக்கு 4 டன் தொழு எரு இட்டு மண்ணுடன் நன்கு கலக்க வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு நடவு செய்ய 600 முதல் 750 கிலோ விதை மஞ்சள் தேவைப்படும். நடவுக்கு முன் விதை மஞ்சளை ஒரு லிட்டர் நீரில் கார்பண்டாசிம் ஒரு கிராம், மேனோகுரோட்டாபாஸ் 2.0 மில்லி கரைசலில் 30 நிமிடங்கள் ஊர வைத்து நடுவதன் மூலம் கிழங்கு அழுகல், செதில் பூச்சி தாக்குதல் நோய்களை கட்டுப்படுத்தலாம். பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இட பல்வேறு நோய்களை கட்டுப்படுத்தலாம்.

அறுவடை காலம்

மஞ்சள் நடவு செய்த 9 மாதங்களில் அறுவடைக்கு தயாராகி விடும். இலைகள் மஞ்சள் நிறமாக மாறுவது, இலைகள் காய்ந்து விடுவது ஆகியவற்றின் மூலம் மஞ்சள் அறுவடைக்கு தயாராகி விட்டது என்பதை தெரிந்து அறுவடை செய்யலாம்.

மஞ்சளுக்கு நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் அதிக வருமானம் பெறலாம்.

–தகவல்: ஆனந்தன், சங்கீதா, அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்.